நாகர்கோவிலில் வழக்கறிஞர்களுக்கு சேம்பர் கட்டுதல்.

192—(*வினா எண் 9565) திரு. கோ. பெருமாள் பிள்ளை: மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நாகர்கோவிலில் அமைந்துள்ள மாவட்ட நீதிமன்றம் மற்றும் நீதிமன்றத்தில் பணியாற்றும் வழக்கறிஞர்களுக்கு சேம்பர் கட்டிக் கொடுக்கும் திட்டம் எந்த நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இத்திட்டத்தை 1986-87 ஆம் ஆண்டிற்கான இரண்டாம் பகுதித் திட்டத்தின்கீழ் கொண்டு வரவேண்டுமென்று அரசு முடிவு செய்தது. ஆனால் நிதிப் பற்றாக்குறை காரணமாக இச்செயற்குறிப்பினை 1986-87 இரண்டாம் பகுதித் திட்டத்தின் கீழ் கொண்டுவர இயலவில்லை. ஆகவே, இத்திட்டத்தினை சிறிது காலம் நிறுத்தி வைக்கும்படியாக உயர்நீதிமன்றத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. உயர்நீதிமன்றம் இச்செயற்குறிப்பினை அரசுக்கு மீண்டும் அனுப்பும்போது மீண்டும் இதன்மீது தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. கோ. பெருமாள் பிள்ளை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகர்கோவில் நகரத்தில் வழக்கறிஞர்களுக்கு கட்டப்பட இருக்கிற அந்த சேம்பர் 198687 லே சேர்க்கப்பட்டு, தற்போது நிறுத்தி வைக்கப்பட்டிருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே கூறினார்கள். குமரி மாவட்டத்தைப் பொறுத்தமட்டில் மாவட்ட நீதிமன்றத்தில் கிட்டத்தட்ட 300 வழக்கறிஞர்களுக்கு மேல் பணியாற்றிக்கொண்டு வருகிறார்கள். அவர்களிலே பெருவாரியான வழக்கறிஞர்கள் தங்களுக்கு போதிய அலுவலகங்கள் இல்லாத காரணத்தால் பணிகளைச் சிறப்பாக செய்ய முடியாத சூழ்நிலையில் நீண்ட காலமாக இந்தக் கோரிக்கையை வலியுறுத்திக் கொண்டு வருகிறார்கள். ஆகவே வருகின்ற ஆண்டிலாவது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தத் திட்டத்தினை நிறைவேற்றித் தருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 24 இலட்சம் ரூபாய் 1985-86ல் இதற்காக ஒதுக்கப்பட்டது. ஆனால் நிதிப்பற்றாக்குறை காரணமாக அது

1987 மார்ச் 26]

தள்ளி போடப்பட்டது. தற்போது 30 லட்சம் ஆகுமென அதற்கு மதிப்பீடு பெறப்பட்டிருக்கிறது. நிதி நிலைக்கு ஏற்ப நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வழக்கறிஞர்களுக்கு சேம்பர் கட்டுவது என்ற பிரச்சினை நாகர்கோவிலில் மட்டுமல்ல பல இடங்களிலும் காலதாமதமாவதற்குக் காரணம், நிதி பற்றாக்குறையும் ஒரு காரணமாக இருக்கிறது. எனவே இந்த நிலையில் வழக்கறிஞர்களே முன்வந்து 10 ஆயிரம் அல்லது 20 ஆயிரம் முன் பணமாக தருகிறோம் என்று சொன்னால் அவர்களுக்கு முன்னுரிமை கொடுத்து மாவட்ட தலைநகரங்களில் இருக்கிற 50 வழக்கறிஞர்கள் சேர்ந்து முன்பணமாக 20 ஆயிரம் தருகிறோம் என்று முன் வந்தால் அப்படிப்பட்டவர்களை வைத்து அரசாங்கமே கட்டிடத்தைக் கட்டி அவர்களுக்கு வாடகைக்கு விடுவதற்கு, இந்த முறையை அரசு பரிசீலிக்குமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நல்ல ஆலோசனையை அரசு ஏற்கெனவே ஆய்ந்து வருகிறது. வழக்கறிஞர் சங்கத்திடம் இது பற்றி பேசி வருகிறது. வழக்கறிஞர்களே முன் வந்து ஓரளவுக்கு அதற்குப் பணத்தைத் தருகிறபோது (HUDCO) நிறுவனத்தின் மூலம் மீதி பணத்தைப் பெற்று கட்டிடத்தைக் கட்டித் தந்தால் தான் பன்னெடு ஆண்டுகளாக இருந்து வருகிற இந்தப் பிரச்சினைக்கு ஒரு தீர்வு ஏற்படும் என்ற முறையிலே இதற்கு நடவடிக்கை எடுப்பதற்கு அரசு தற்போது தீவிர முயற்சியில் இருக்கிறது.

கோவை சட்டக் கல்லூரியில் தமிழைப் பயிற்று மொழியாக்கும் பணி.

193—(*வினா எண் 10763) திரு. ஆ. நடராசன்: மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கோவை சட்டக் கல்லூரியில் பாடங்களைத் தமிழில் சொல்லிக் கொடுக்க தகுதி படைத்த தமிழாசிரியர்களை அரசு நியமனம் செய்யுமா ?